# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

## ஊடக அறிக்கை

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இந்திய உயர் ஸ்தானிகர் விஜயம்

திருகோணமலையில் உள்ள கடற்படை மற்றும் கடல் சார் அக்கடமியில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் இலங்கை ரூபா 22 மில்லியன் பெறுமதியான பயிற்சி பொதிகளை இலங்கை கடற்படையின் கிழக்கு கடல் பிராந்திய தளபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

2019 டிசம்பரில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இந்திய கடற்படை பிரதானி அட்மிரல் கரம்பீர் சிங் அவர்கள், இலங்கை கடற்படைக்கு தேவையான ஒரு தொகுதி பயிற்சி பொதிகளை வழங்குவதற்கு உறுதியளித்திருந்தார். பிராந்திய கடற்படைகளின் ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதில் இந்திய கடற்படை கொண்டிருக்கும் உறுதிப்பாட்டுக்கு அமைவாக இந்த பயிற்சி பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளன. இலங்கை கடற்படையின் கடற்படை மற்றும் கடல்சார் அக்கடமியில் கற்கைநெறிகளின் சிறப்பியல்புகள் மீதான கவனத்துடன் 2020 ஆம் ஆண்டில் சுதேசியத்தயாரிப்பான வருணாஸ்திரா கன எடை டோபெர்டோ, மெல் எடை டோபெர்டோவின் செயற்படு மாதிரி, நீரின்கீழ் பயன்படும் தொலைபேசி, வாயு டேர்பைன் மாதிரி, HMS திருகோணமலையின் மாதிரி மற்றும் பெதி வெப்பமானி ஆகியவை வழங்கப்பட்டதுடன் இந்திய கடற்படை இலங்கை கடற்படை மற்றும் இந்தியாவின் OEMs ஆகியவற்றுடன் இணைந்து இவை அனைத்தும் கூட்டு முயற்சியின் அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி பொதிகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் சந்தர்ப்பத்தில், ஒட்டுமொத்த இருதரப்பு உடன்பாடுகளின் மிக முக்கியமான பகுதியாக இரு கடற்படையினரிடம் நெருக்கமான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் தொடர்பாக உயர் ஸ்தானிகர் வலியுறுத்தியிருந்தார். அத்துடன் கடற்படை மற்றும் கடல்சார் அக்காடமியின் நூலகத்திற்கான புத்தகங்களையும் கிண்ட்ல் இ-புத்தக சாதனங்களையும் அவர் கையளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் செயற்பாட்டு அடிப்படையிலான உறவினை பேணிவரும்அதேநேரம் இந்திய கடற்படையால்

இலங்கை கடற்படையினருக்கு பல்வேறு பயிற்சி வாய்ப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**************

கொழும்பு
14 மார்ச் 2021